முடியவில்லை. இதுதவிர, தீப்பெட்டித் தொழில் நிறுவனங்களுக்கு, மெழுகினை ரொக்கத்திற்குத்தான் சிட்கோ நிறுவனம் விற்பனை செய்து வருகிறது; கடனுக்குத் தருவதில்லை. ஆகவேதான், தனியார் நிறுவனங்கள், மெழுகினைக் கடன் முறையில் விநியோகம் செய்வதால், குடியாத்தத்தில் மெழுகு வாங்குவதற்கு யாரும் முன்வராத காரணத்தால், விற்பனைப் பிரிவு தொடங்க இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. *(குறுக்கீடு)*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் — மத்திய நிதி அமைச்சர் கூற்று

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரினுடைய கவனத்திற்கு ஒரு செய்தியை நான் கொண்டு வருகிறேன். இன்றைக்குக் காலையிலே நான் பத்திரிகையிலே பார்க்கிறபோது—முதலமைச்சர் அவர்கள் படித்து இருப்பார்கள் -- மத்திய நிதி அமைச்சர் அவர்கள், மத்திய பட்ஜெட்டைப் பற்றி ஒரு கூட்டத்திலே பேசுகிறபோது, "சேதுசமுத்திரத் திட்டத்தினுடைய கால்வாய்த் திட்டம் தாமதம் ஆவதற்கு, மாநில அரசு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து தடையில்லா சான்றிதழ் கேட்டோம்; சென்ற ஆண்டு ஜூலையிலே கேட்டோம் இதுவரையிலே தரவில்லை; அது குறித்து Court-க்கும்போய் இருக்கிறார்கள். எனவே, சேது சமுத்திரத் திட்டம் வருவதற்குத் தடையாக இருப்பது... *(குறுக்கீடு)* excuse me; சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி Port Trust Chairman, இங்கே தமிழ்நாடு Pollution Control Board Chair Person-க்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில், உயர் நீதிமன்றம் அந்த Petition-ஐத் தள்ளுபடி செய்துவிட்டது; dismiss செய்துவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 மார்ச் 8]

திரு. துரைமுருகன்: அதைத்தான் சொல்கிறேன். அவர் மாசுக் கட்டுப்பாடு வாரியத்திலிருந்து அனுப்பவில்லை என்று சொல்லியிருக்கிறார்; ஒன்று. இரண்டாவது, ஆயிரம் கோடி ரூபாய் இந்தத் தமிழ்நாட்டிற்குக் கடல் நீரைக் குடிநீராக்குவதற்குச் சென்ற ஆண்டே ஒதுக்கி இருந்தோம்; சென்ற ஜூலை மாதம், 8 ஆம் தேதி நாங்கள் இந்த அரசைக் கேட்டோம்; நிதி தருகிறோம்; தொழில்நுட்ப உதவியும் தருகிறோம். . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், என்ன? நிதிநிலை அறிக்கையில் பேசும்போது சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: இல்லை, இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நீண்ட விவாதத்திற்கு வந்து இப்போது. . . (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: இல்லை, இல்லை. இன்றைக்கு வந்த செய்தி. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை.

திரு. துரைமுருகன்: உங்களுக்கும் தெரியும். அன்றைக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முக்கியமான பிரச்சினை என்று, அரசாங்கத்தினுடைய கவனத்தை உடனடியாக ஈர்க்கக்கூடிய ஒரு பிரச்சினையைத்தான் சொல்ல வேண்டும். மற்றவற்றை நீங்கள் நிதிநிலை அறிக்கையிலே பேசுங்கள். அவற்றிற்கு முதலமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கம் அளிப்பார்கள். (குறுக்கீடு) மற்றவற்றை நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் பேசுங்கள். உங்களுடைய உறுப்பினர் இன்றைக்குப் பேச இருக்கிறார். அவரைப் பேசச் சொல்லுங்கள்.

முற்பகல் 11-0.5

திரு. துரைமுருகன்: ஆகவே ஆயிரம் கோடி ரூபாய் திட்டம் வருவதற்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதிநிலை அறிக்கையிலே பேசச் சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: குற்றச்சாட்டு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றச்சாட்டு என்பதல்ல. (குறுக்கீடு) இவையெல்லாம், நீண்ட விவாதத்திற்கு உரியவற்றை எல்லாம், உடனடியாக இப்படிக் கிளப்பக்கூடாது; இது முறையல்ல.